## 14.1 அனைத்து ஊராட்சிகளில் உள்ள கட்டிடங்களுக்கு புதிய கதவிலக்க எண்கள் வழங்குதல்

ஊரக வளர்ச்சி (சி2 துறை

அரசாணை (நிலை) எண். 238 நாள் : 10.11.1999

**ஆணை**

இந்திய அரசினால் 2001–ம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப பணிகள் வருகின்ற 2000–ஆம் ஆண்டு ஜனவரி முதல் தொடங்கவிருக்கிறது. ஏனவே, இந்திய மக்கட் தொகை கணக்கெடுப்புத் துறை 2000 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மாநில அரசு எவ்வித நிர்வாக மாறுதல்களும் மேற்கொள்ளப்படாது என தடையாணை வெளியிட உள்ளது. இந்த தடையாணை 2001–ம் ஆண்டு மார்ச் மாதம் வரை நடைமுறையில் இருக்கும். இந்நிலையில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் நிர்வாக சம்மந்தப்பட்ட மாறுதல்களை இந்த ஆண்டு டிசம்பருக்குள் செய்து முடிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மக்கட்தொகை கணக்கெடுப்புத் துறையினர் வருகின்ற 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஆரம்ப பணியாக ஒவ்வொரு கிராமம் மற்றும் சிறிய பெரிய நகரங்களின் வரைபடங்கள் தயாரிக்கும் பணியினை தொடங்கி 2000 ஏப்ரல், மே மாதம் அளவில் அவைகளை வெளியிட்டு, பின்னர் மக்கட் தொகை கணக்கெடுப்பு பணியினை மேற்கொள்வதற்கான பணியாளர்களை நியமித்து பயிற்சி அளிக்கும் பணி மேற்கொள்ளவிருக்கிறார்கள்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 156 உட்பிரிவு 1–ன்படி ஊராட்சி அமைப்புகளும் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் கதவிலக்க எண்கள் வழங்க வேண்டும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் புதிய கதவிலக்க எண்கள் வழங்கப்பட்டு பத்தாண்டுக்கு மேலாகிவிட்டபடியால் தற்போதுள்ள அநேக புரிதயதாக கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு கதவிலக்க எண்கள் உபஎண்களில் (sub numbers) அதாவது ஏ,பி,சி என்று வழங்கப்பட்டுள்ளன. மேலும் சமீபத்தில் கட்டப்பட்டிருக்கும் புதிய கட்டிடங்களுக்கு எண்கள் வழங்கப்படாமலும் இருக்கலாம். ஏனவே மக்கட் தொகை கணக்கெடுப்புப் பணி ஆரம்பிப்பதற்கு முன்னரே அனைத்து கட்டிடங்களுக்கும் புதிய கதவிலக்கு எண்கள் வழங்கலாமென அரசு முடிவெடுத்து, அனைத்து ஊராட்சிகளுக்கும் கீழ்க்கண்டவாறு கதவிலக்க எண்கள் வழங்க அரசு ஆணை வெளியிடுகிறது–

1. ஒரு தெரு அல்லது சாலையிலுள்ள இரண்டு பக்க கட்டிடங்களில் ஒரு பக்கத்தில் உள்ள கட்டிடங்களுக்கு 1,3,5,7,9,11,13,1517,19 என்ற ஒற்றைப்படை எண்களும், மறு பக்கத்திலுள்ள கட்டிடங்களுக்கு 2,4,6,810,12,1,14,16,18,20 என்ற இரட்டைப் படை எண்களும் வழங்கவேண்டும்.

2. இவ்வாறு புதிய கதவிலக்க எண்கள் வழங்கப்படும் போது பொது மக்களுக்கு பழைய மற்றும் புதிய எண்கள் குறித்து குழப்பங்கள் ஏற்படுவதை தவிர்க்க ஒவ்வொரு கதவிலும் புதிய எண் மற்றும் பழைய எண் இரண்டையும் தமிழில் கீழ்க்கண்டவாறு குறிக்க வேண்டும். ப.எண். 9/21 நாளடைவில் புதிய எண்கள் வழங்கதிற்கு வந்தபின் பழைய எண்களை அழித்து விடலாம்.

3. ஒரு தெரு அல்லது சாலையில் இடது பக்கத்தில் இருந்து கதவிலக்க எண் ஆரம்பிக்க வேண்டும் தற்போது அனைத்து கட்டிடங்களுக்கும் புதிய எண்கள் வழங்கப்படுவதால் ஏ,பி,சி,டி என்ற உப எண்கள் வழங்கக்கூடாது. புதிய கதவிலக்க எண்கள் வழங்கி மக்கட்தொகை கணக்கெடுப்பு பணி முடிவடைந்த பின்னர், எண்கள் வழங்கப்படாத புதிய கட்டிடங்களுக்கு கதவிலக்க எண்கள் வழங்கும்போது பக்கத்து கட்டிடத்தின் எண்ணோடு சேர்த்து ஏ,பி,சி,டி என்ற உப எண்கள் வழங்கலாம்.

4. ஒரு தெருவில் அல்லது சாலையில் உள்ள கட்டிடங்களுக்கு இடையில் காலிமனை அல்லது மனைகள் இருந்தால் அந்த காலிமனை அல்லது மனைகளுக்கு கதவிலக்க எண் வழங்கக்கூடாது.

5. கதவிலக்க எண்கள் வழங்கும்போது பலமாடிகள் கொண்ட ஒவ்வொரு கட்டிடத்திற்கும் ஒரு எண் தான் வழங்க வேண்டும். இவ்வாறு வழங்கிய பின்னர் அக்கட்டிடததில் உள்ள ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு உப எண்கள் சேர்த்து அதாவது 18/1, 18/2, 18/3, 18/4 என்று கட்டிடத்திற்கு வெளியில் தெரியுமாறு அக்கட்டிடச் சொந்தக்காரர்கள் அவர்களாகவே கதவிலக்க எண்கள் கொடுத்துக் கொள்ள வேண்டும். கட்டிடச் சொந்க்காரர்கள் ஏ,பி.சி,டி என்ற உப எண்களைத் தங்களது பல மாடிக் கட்டிடங்களுக்கும் பயன்படுத்தக்கூடாது.

**3.** மேற்கூறியவாறு அனைத்து கட்டிடங்களுக்கும் புதிய கதவிலக்க எண்கள் வழங்கும் பணியை இந்த அரசாணை கிடைக்கப் பெற்றவுடன் ஆரம்பித்து **31.12.1999**க்குள் கட்டாயமாக முடித்துவிட வேண்டும். இந்த பணியை ஆரம்பித்து முதலில் வெள்ளை சுண்ணாம்புக் கட்டியினால் (chalk piece) ஒவ்வொரு கதவிலும் வரிசையாக எண்கள் கொடுப்பது பிறகு அக்கதவுகளில் கருப்பு வெள்ளை வர்ணங்களில் எண்கள் வழங்குவது போன்ற நடவடிக்கைகள் எடுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறை தலைவர் விரிவான

**4. 31.12.1999**க்குள் அனைத்து கட்டிடங்களுக்கும் புதிய கதவிலக்க எண்கள் வழங்கி அவ்விவரங்களை கீழ்க்கண்ட முகவரிக்கு **20.1.2000**க்குள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுப்பி வைக்க வேண்டும்.

The Director of Census Operations (Tamil Nadu)<br>
E Wing, Third Floor, ABC Blocks,<br>
Rajaji Bhavan, Besant Nagar,<br>
CHENNAI 600 090

மேலும், சட்டமன்ற வாக்கபாளர் பட்டியலில் தற்போது கதவிலக்க எண்களுக்கு இணையான புதிய எண்கள் குறித்த விவரங்களும் தயாரித்து சட்டமன்ற வாக்காளர் பதிவு அலுவலகத்திற்கும், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையருக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

**5.** மேலே தெரிவித்துள்ள கதவிலக்க எண்கள் வழங்குவது குறித்த பணிகள் முடிவடைந்ததற்கான ஒரு அறிக்கை **31.1.2000**–க்குள்ளும் மற்ற விவரங்கள் அனுப்பிவைத்ததற்குமான அறிக்கையை **31.3.2000**க்குள்ளும் அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர்/ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**6.** இந்த பணிக்கான செலவினத்தை கிராம ஊராட்சிகள் தங்களது நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும்.

**7.** இவ்வரசாணையை அனைத்து ஊராட்சிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லுமாறு அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**<br>
அரசு செயலாளர்